**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் செய்யாறு, திருவண்ணாமலை மாவட்டம்.**

**முன்னிலை :** செல்வி. சே.தா. ஆயிஷ் பேகம், பி.ஏ., பி.எல்.,
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி, செய்யாறு.

2023ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 20ம் நாள் வியாழக்கிழமை

**இடைக்கால மனு எண்.2/2022ன் அசல் வழக்கு எண். 25/2015**

மைனர் பிரவீன் குமார், வயது 6
(வாதி மைனர் ஆதலால் அவரது தாயாரும், கார்டியனும்,
சவரட்சணைக் கர்த்தாவுமான ராதா வயது 35 என்பவரால்
எடுத்துரைக்கப்படுகிறார்). ...மனுதாரர் /வாதி

/எதிர்/

ரவி, வயது 46 ...எதிர்மனுதாரர்/பிரதிவாதி

இம்மனு 17.04.2023ம் தேதியன்று என் முன்பாக இறுதி விசாரணைக்கு வந்தபோது, மனுதாரர்/வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. ஜி. நெடுஞ்செழியன், அவர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.ஜி.குணசேகரன், அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதத்தைக் கேட்டறிந்தும், கோப்புகளை பரிசீலனை செய்தும் இன்று, இதுகுறித்து இந்நீதிமன்றம் வழங்கும்...

**உத்தரவு**

உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 9 விதி 9ன் கீழ் 12.10.2022 அன்று தள்ளுபடி செய்யப்பட்ட உத்தரவை ரத்து செய்து மீண்டும் வழக்கை மீள்திறவு செய்து கோப்பிற்கு எடுக்க உத்தரவு பிறப்பிக்க கோரி மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2) மனுவின் சுருக்கம்.**

மனுதாரர் மேற்படி தாவாவில் வாதியின் பாதுகாவலர். அவருக்காக இம்மனுவை தாக்கல் செய்கிறார். மேற்படி வழக்கில் 12.10.2022 அன்று மனுதாரரின் குறுக்கு விசாரணைக்காக வாய்தா போடப்பட்டிருந்தது. அன்றைய தினம் மனுதாரருக்கு கடுமையான வயிற்று வலி ஏற்பட்டு

மனுதாரரால் வெளியே வர இயலவில்லை, மனுதாரரின் வழக்கறிஞருக்கும் தகவல் தெரிவிக்க இயலவில்லை. எனவே மனுதாரர் இந்நீதிமன்றத்தில் 12.10.2022 ஆஜராகாததால் மனுதாரரின் வழக்கை தள்ளுபடி செய்து உத்தரவிடப்பட்டுள்ளது. அன்றைய தினம் மனுதாரர் ஆஜராகாதது தெய்வாதீனமானதும், மன்னிக்கத்தக்கதுமாகும். மேலும் மேற்படி வழக்கில் மனுதாரருக்கு வெற்றி பெறக்கூடிய வாய்ப்புகள் நிறைய உள்ளன. எனவே 12.10.2022 அன்று தள்ளுபடி செய்யப்பட்ட வழக்கை மீண்டும் மீள்திறவு செய்து உத்தரவிடக் கோரியும், இல்லையேல் மனுதாரருக்கு மிகுந்த கஷ்ட, நஷ்டங்கள் ஏற்படும் என்றும், எனவே இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3. <u>எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிருரையின் சுருக்கம்.</u>

மனுவில் கூறியுள்ள சங்கதிகள் பொய்யானது என்றும், மனுதாரர்/வாதி 12.10.2022 தேதியில் அவரை குறுக்கு விசாரணை செய்வதற்காக வாய்தா வழங்கப்பட்டிருந்ததாகவும், அந்த விசாரணைக்கு வருவதற்கு முன்பு கடுமையான வயிற்றுவலி என்று மனுவில் குறிப்பிட்டுள்ள சங்கதி தவறு என்றும் மனுதாரர்/வாதியை குறுக்கு விசாரணை செய்வதற்காக முதல் விசாரணை செய்த நாளிலிருந்து பல்வேறு வாய்தாக்கள் குறுக்கு விசாரணைக்கு ஆஜராக மனுதாரருக்கு வாய்ப்பு அளித்தும், மனுதாரர்/வாதி நீதிமன்றத்தில் மேற்படி வழக்கில் குறுக்கு விசாரணைக்கு ஆஜராகாமல் தவிர்த்து வந்தார் என்றும், மேலும் 12.10.2022ம் தேதியில் கண்டிப்பாக மனுதாரர்/வாதி நீதிமன்றத்தில் ஆஜராக வேண்டும் என்றும், தன்னை குறுக்கு விசாரணைக்கு உட்படுத்திக் கொள்ள வேண்டும் என்றும் நீதிமன்றம் உத்தரவிட்டிருந்த நிலையில் அன்றைய தினம் மனுதாரர்/வாதியின் வழக்கறிஞர் மேற்படி மனுதாரர்/வாதி குறித்து எந்தவித தகவலும் இல்லையென்று நீதிமன்றத்தில் தெரிவித்திருந்த நிலையில், நீதிமன்றத்தில் 12.10.2022ம் தேதியில் வழக்கு தள்ளுபடி செய்து உத்தரவிடப்பட்டிருந்தது என்றும், அந்த உத்தரவினை மனுதாரர்/வாதி நன்கு தெரிந்திருந்தும் வேண்டுமென்றே தற்போது காலம் கடத்தி தான் வயிற்று வலியால் நீதிமன்றத்தில் ஆஜராக இயலவில்லை என்று காலம் கடத்தி மனுதாரர் இந்த மனுவினை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளதால் இந்த மனு அடிப்படையிலேயே தள்ளுபடி செய்யப்பட வேண்டிய ஒன்று என்றும் எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

4) இம்மனுவில் தற்பொழுது தீர்மானம் செய்யவேண்டியது மனுதாரர்களின் மனு, அனுமதிக்கப்படக்கூடியதா? என்பதே ஆகும்.

5) இம்மனுவில், இருதரப்பிலும் சாட்சிகளும் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணங்களும் குறியீடு செய்யப்படவில்லை.

6) இம்மனுவில் மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் தனது வாதத்தில் மனுதாரர் உரிய நேரத்தில் மனுதாரர் தன்னை குறுக்கு விசாரணைக்கு உட்படுத்தாத காரணத்தாலும், மனுதாா் வாய்தா தினத்தன்று நீதிமன்றத்தில் ஆஜராகாத காரணத்தாலும், 12.10.2022 அன்று வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. மனுதாரர் தனது வழக்கை எடுத்துரைத்து வெற்றிபெறுவதற்கு மனுதாரருக்கு நிறைய வாய்ப்புகள் உள்ளதாகவும், வழக்கு கோப்பிற்கு எடுத்துக்கொள்ளப்படவில்லை என்றால் மனுதாரருக்கு பெருத்த கஷ்டமும், நஷ்டமும் ஏற்படும் என்றும், எனவே வழக்கை மீள்திறவு செய்து மனுதாரர் இவ்வழக்கை மேல்நடத்த அனுமதி அளிக்க வேண்டும் என்றும், மனுதாரர் இம்மனுவினை உரிய நேரத்தில் தாக்கல் செய்துள்ளதாகவும், எனவே இம்மனுவினை அனுமதிக்குமாறும் வாதிட்டார்.

7) எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் தனது வாதத்தில் மனுதாரர் 6 மாத காலமாக குறுக்கு விசாரணைக்கு ஆஜராகாமல் இருந்ததால் நீதிமன்றம் வழக்கை தள்ளுபடி செய்துள்ளது எனறும், மனுதாரர் உடல்நிலை சரியில்லை என்று கூறியுள்ளதற்கு அனுசரனையாக மருத்துவ ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றும், மனுதாரர் முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது என்றும் எனவே மனுதாரர் தாக்கல் செய்துள்ள இந்த வழக்கை மீள்திறவு செய்வதற்கு எந்தவித முகாந்திரமும் இல்லை என்றும், எனவே இந்த மனுவினை தள்ளுபடி செய்யுமாறு வாதிட்டார்.

8. மனுதாரர்/வாதி தரப்பில் கூடுதல் வாதத்தில் ஜீவனாம்ச வழக்கானது உரிமை குறித்த விளம்புகை செய்யப்படாததால் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது என்றும் மனுதாரருக்கு வழக்கில் நல்ல கட்சி உள்ளதாகவும், எனவே மனுவினை அனுமதிக்குமாறும் வாதிடப்பட்டது.

9. இருதரப்பு வாதம் கேட்கப்பட்டது. கோப்புகள் கவனத்துடன் பரிசீலிக்கப்பட்டது.

10) தீர்வு

மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள இம்மனுவானது வழக்கை மீள்திறவு செய்யக் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர்கள் தரப்பில் மனுதாரர் மீண்டும் மீண்டும் வழக்கை நடத்தாமல் காலம் தாழ்த்தி வருவதாகவும், எதிர்மனுதாரர்களை அலைகழிப்பதாகவும் குறிப்பிட்டுள்ளார். வழக்கு கோப்புகள் பரிசீலிக்கப்பட்டது. இவ்வழக்கினை பிரதிவாதியின் மகன் வாதி என விளம்புகை செய்யக்கோரி வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது தெரிய வருகிறது. மேலும் மனுதாரர் தன்னுடைய இளவர் மகனின் உரிமை குறித்து விளம்புகை கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளார். எதிர்மனுதாரர் தரப்பில் ஜீவனாம்சம் கோரி மனுதாரர் தாக்கல் செய்திருந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டுவிட்டதால் இந்த வழக்கு முகாந்திரம் இல்லை என்றும் எனவே இந்த மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றும் கூறப்பட்டுள்ளது. மேலும் எதிர்மனுதாரர் தரப்பில் உரிமை குறித்து முடிவு செய்யப்படாத காரணத்தினால் ஜீவனாம்ச வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டு விட்டதாகவும், மனுதாரருக்கு வழக்கை நடத்த வாய்ப்பு அளிக்குமாறும் வாதிடப்பட்டுள்ளது. மேலும் வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கு அடிப்படை உரிமை குறித்து தீர்வு காண வேண்டிய வழக்காக உள்ளது. மேலும் இது குறித்து மனுதாரருக்கு ஒரு வாய்ப்பு அளித்தால்தான் வழக்கில் முறையான, முழுமையான தீர்வு காண இயலும் என்றும் மனு தள்ளுபடி செய்யப்படும் பட்சத்தில் மனுதாரருக்கே பெருத்த கஷ்ட நஷ்டம் ஏற்படும், எதிர்மனுதாரருக்கு மனுதாரரை குறுக்கு விசாரணை செய்து வழக்கில் முறையான தீர்வு காண இயலும் என்ற காரணத்தாலும் மனுதாரர் வழக்கில் வாய்தா தினத்தன்று ஆஜராக இயலாத காரணத்தை குறிப்பிட்டுள்ளார். அந்த காரணத்தில் தனக்கு வயிற்று வலி ஏற்பட்டதால் ஆஜராக இயலவில்லை என்று கூறியுள்ள காரணம் ஏற்புடையதாக உள்ளது. மேலும் இம்மனு வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டு உரிய நேரத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது தெரிய வருகிறது. எனவே நீதியின் நலன்பால் இம்மனுவினை அனுமதிப்பது உகந்தது என்று இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது.

11. மேலும் மனுதாரருக்கு பல வாய்ப்பு அளித்திருந்தும் ஆஜராகாமல் இருந்து வந்தது தெரிய வருகிறது. எனவே எதிர்மனுதாரருக்கு ஏற்பட்டுள்ள இழப்பீட்டை ஈடு செய்ய மனுவின் செலவுத் தொகையை எதிர்மனுதாரருக்கு மனுதாரர் செலுத்த வேண்டும் என்று இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது.

**முடிவாக,** இம்மனுவின் செலவுத் தொகையை மனுதாரர்/வாதி, எதிர்மனுதாரருக்கு செலுத்த வேண்டும் என்ற உத்தரவோடு இம்மனு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது.

இவை என்னால் நேரடியாக சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு பிழை நீக்கம் செய்யப்பட்டு 2023-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 20ம் நாளான இன்று இந்நீதிமன்ற அவையறிய உத்தரவு பகரப்பட்டது.

(ஒம்). சே.தா. ஆயிஷ் பேகம்,
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
செய்யாறு.

**<u>மனுதாரர் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்</u> :-**

-இல்லை-

**<u>எதிர்மனுதாரர் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்</u> :-**

-இல்லை-

(ஒம்). சே.தா. ஆயிஷ் பேகம்,
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
செய்யாறு.